புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2023** **20 மே 2023**

## பத்திரிகை செய்தி

பாரதப் பிரதமரின் டயாலிசிஸ் திட்டத்தை புதுச்சேரி மாநிலத்தில் சிறப்பாக நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று(20-05-2023) துணைநிலை ஆளுநர் மாளிகையில் நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர் தமிழிசை சௌந்தரராஜன் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் தலைமைச் செயலர் திரு ராஜீவ் வர்மா, சுகாதாரத்துறைச் செயலர் திரு உதயகுமார், சுகாதாரத்துறை இயக்குநர் டாக்டர் ஸ்ரீராமலு, துணை இயக்குநர் டாக்டர் அனந்தலட்சுமி, தலைமை மருந்தக அதிகாரி டாக்டர் ரமேஷ், குஜராத் ஐகேடிஆர்சி (IKDRC) நிறுவனத்தின் இயக்குநர் தலைமையிலான அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாரதப் பிரதமரின் டயாலிசிஸ் திட்டம் குஜராத் மாநிலத்தைச் சேர்நத ஐகேடிஆர்சி (IKDRC) நிறுவனத்தின் மூலமாக சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறைப்படி நீரிழிவு நோயாளிகள் டாயாலிசிஸ் செய்து கொள்ளும் முறை எளிமைப்படுத்தப்பட்டு இருக்கிறது.

- நோயாளிகள் அதிக முறை டயாலிசிஸ் சிகிச்சை பெறுவது தவிர்க்கப்படுகிறது. அதனால் தொற்று நோய் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகள் குறைவு.
- கிராமப் பகுதிகள் உட்பட மாநிலத்தின் பல்வேறு இடங்களில் டாலிசிஸ் சிகிச்சை மையங்கள் திறக்கப்பட்டு நோயாளிகள் விவரங்கள் கணினி மயமாக்கப்படுவதால் அவர்கள் மாநிலத்தின் எந்த மையத்திலும் டயாலிசிஸ் சிகிச்சை பெற முடியும்.
- நோயாளிகள் டயாலிசிஸ் செய்து கொள்ள மருத்துவமனைக்கு வந்து செல்வதற்கான பயணச் செலவுத் தொகை ரூ. 300 வீதம் வழங்கப்படுகிறது.

இதனை அறிந்து, இந்த குஜராத் மாதிரி டயாலிசிஸ் முறையை புதுச்சேரியில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் செயல்படுத்துவதற்காக துணைநிலை ஆளுநர் கடந்த ஆறு மாதங்களாக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இது தொடர்பாக, ஐகேடிஆர்சி (IKDRC) நிறுவனத்தின் அதிகாரிகளை அழைத்து ஆலோசனை நடத்தினார். மத்திய சுகாதார அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா அவர்களிடமும் ஆலோசனை செய்து அதற்கான உதவிகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அண்மையில் சௌராஷ்டிரா-தமிழ் சங்கமம் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள குஜராத் சென்றிருந்தபோது குஜராத் மாநில முதலமைச்சரைச் சந்தித்து இந்த டயாலிசிஸ் முறை செயல்படுத்தப்படும் விதம் குறித்து கேட்டறிந்தார். இதனை

புதுச்சேரி மாநிலத்தில் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதன் தொடர்ச்சியாக, இன்று நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில்,
தற்போது புதுச்சேரியில் உள்ள டயாலிசிஸ் சிகிச்சை மையங்களின் செயல்பாடு, டயாலிசிஸ் மையங்களில் உள்ள தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துதல், அவற்றின் அமைவிடம் ஆகியவற்றை முறைப்படுத்துதல், மனித வளம், தொழில்நுட்ப வசதிகளை அதிகரித்தல், குஜராத்தைச் சேரந்தை ஐகேடிஆர்சி (IKDRC) நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவதற்கான சாத்தியக் கூறுகள், இணையவழி சிகிச்சை முறையை அறிமுகப்படுத்துவதற்கான வழிமுறைகளை ஆராய்தல், பாரதப் பிரதமிரின் டயாலிசிஸ் திட்டச் செயல்பாட்டை துரிதப்படுத்துதல், இந்த திட்டத்திற்கான நிதி ஆதாரத்தை மேம்படுத்துதல் ஆகியவை குறித்து ஆலோசனை செய்யப்பட்டது.